# நவம்பர் – 06 – செவ்வாய்

புனித ஸெலியானந்து

**ஏனெனில் அரசு ஆண்டவருடையது: பிற இனத்தார்மீதும் அவர் ஆட்சி புரிகின்றார். திபா. 22:28**

## முதல் வாசகம் : பிலிப்பியர் 2 : 5 – 11

சகோதர சகோதரிகளே, கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்!கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி,சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர்தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக "இயேசு கிறிஸ்து ஆண்டவர்" என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

**பதில்பாடல் :** மாபெரும் சபையில் நான் செலுத்தும் புகழ் உம்மிடமிருந்து எழுவதாக

## நற்செய்தி : லூக்கா 14 : 15 – 24

அக்காலத்தில், இயேசுவோடு பந்தியில் அமர்ந்தவர்களுள் ஒருவர் இவற்றைக் கேட்டு அவரிடம், "இறையாட்சி விருந்தில் பங்கு பெறுவோர் பேறுபெற்றோர்" என்றார்.இயேசு அவரிடம் கூறியது: "ஒருவர் பெரியவிருந்து ஒன்றை ஏற்பாடு செய்து பலரை அழைத்தார்.விருந்து நேரம் வரவே அவர் அழைப்புப் பெற்றவர்களிடம் தம் பணியாளரை அனுப்பி, "வாருங்கள், எல்லாம் ஏற்கெனவே ஏற்பாடு செய்தாகிவிட்டது" என்று சொன்னார்.அவர்கள் எல்லாரும் ஒருவர்பின் ஒருவராய்ச் சாக்குப்போக்குச் சொல்லத் தொடங்கினர். முதலில் ஒருவர், "வயல் ஒன்று வாங்கியிருக்கிறேன் அதை நான் கட்டாயம் போய்ப்பார்க்க வேண்டும். என்னை மன்னிக்க வேண்டுகிறேன்" என்றார்."நான் ஐந்து ஏர்மாடுகள் வாங்கியிருக்கிறேன் அவற்றை ஓட்டிப்பார்க்கப் போகிறேன். என்னை மன்னிக்கவேண்டுகிறேன்" என்றார் வேறொருவர்."எனக்கு இப்போது தான் திருமணம் ஆயிற்று. ஆகையால் என்னால் வரமுடியாது" என்றார் மற்றொருவர்.பணியாளர் திரும்பிவந்து இவற்றைத் தம் தலைவருக்கு அறிவித்தார். வீட்டு உரிமையாளர் சினமுற்றுத் தம்பணியாளரிடம், "நீர் நகரின் வீதிகளுக்கும் சந்துகளுக்கும் விரைந்துசென்று ஏழையர், உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், கால் ஊனமுற்றோர் ஆகியோரை இங்கே கூட்டிவாரும்", என்றார்.பின்பு பணியாளர், "தலைவரே, நீர் பணித்தபடி செய்தாயிற்று இன்னும் இடமிருக்கிறது" என்றார்.தலைவர் தம் பணியாளரை நோக்கி, "நீர் வழியோரங்களிலும் நடைபாதைகளிலும் போய், எனது வீடு நிரம்பும் அளவுக்கு மக்களை வற்புறுத்திக் கூட்டிவாரும்.அழைக்கப் பெற்றவர்களுள் எவரும் என்னுடைய விருந்தைச் சுவைக்கப் போவதில்லை என உமக்குச் சொல்கிறேன்" என்றார்."

**தியானம்:** இன்று எங்களை தியானிக்க அழைத்து நிற்கும் கருப்பொருள் "அழைப்பு." அவ்வழைப்பு என்பது அனைவருக்கும் விடுக்கப்படும் ஒன்றாகும். ஆனால் அதற்கு செவிமடுப்போரோ ஒரு சிலரே. இன்றைய தியான வாசகத்திலும் கூட இயேசு உவமைகளினூடாக தனது அழைப்பின் தனமையை வெளிப்படுத்துகிறார். ஒருவர் திருமண விருந்திற்கு பலரை அழைக்கின்றார் ஆனால் அழைக்கப்பட்டவர்களோ ஒருவர் வயல் ஒன்று வாங்கியிருக்கினறேன் அதைக் கட்டாயம் பார்க்க வேண்டும் என்றும், மற்றவர் நான் ஐந்து ஏர் மாடுகள் வாங்கியிருக்கின்றேன் அதை ஓட்டிப் பார்க்கவேண்டும் என்றும், இன்னொருவர் எனக்கு இப்போது தான் திருமணமாகியிருக்கிறது என்னால் வரமுடியாது என்றும் ஒவ்வொருவரும் காரணம் காட்டி வர மறுத்துவிடுகிறார்கள். ஆனால் விருந்தை ஆயத்தப்படுத்தியவர் தனது பணியாளரிடம் உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், வீதியோரங்களில் போவோர், வருவோர் யாவரையும் அழைத்து கொண்டாடி மகிழ்ந்தார். இன்று இறைவன் எங்கள் ஒவ்வொருவரையும் அழைத்திருக்கின்றார் நாங்கள் தான் அவ் அழைப்பை மறுத்து ஒவ்வொரு காரணங்கள் கூறி அவரை விட்டு விலகி உலக காரியங்களுக்காக நேரங்களை செலவளித்துக் கொண்டிருக்கின்றோம். இதே போன்று நாங்களும் பலபணிகள் புரிவதற்காக அழைக்கப்பட்டிருக்கின்றோம், இறைவன் படித்தவன், படிக்காதவன். ஏழை, பணக்காரன் என்று பார்த்து அழைப்பவரல்ல ஏனென்றால் சுங்கச்சாவடியில் வீற்றிருந்த மத்தேயுவை அழைத்தார். கடலில் மீன்பித்துக்கொண்டிருந்த பேதுருவை அழைத்தார். இவ்வாறாக சாதி, மத. பேதமின்றி அழைத்து எங்களுக்கு ஆவியானவரின் வல்லமையும் ஆசீர்வாதத்தையும் வழங்கியிருக்கிறார். எனவே இவ் அழைப்பை ஏற்றுக்கொண்டு நாங்கள் எம்மைத் தாழ்த்தியவர்களாக ஆன்மீக உணவாகிய இறைவார்த்தையை உட்கொண்டு மற்றவர்களுக்கும் அதை அறிவித்து அவரைப் போற்றி மகிமைப்படுத்துவோம். "எளியோர் உணவு உண்ட நிறைவு பெறுவர், ஆண்டவரை நாடுவோர் அவரைப் புகழ்வார்களாக, அவர்கள் இதயம் என்றென்றும் மகிழ்ந்திருக்கும்". (தி.பா.22:26)